
11. வட்டத்தின் தொடுகோடும் அதன் ஆரமும் செங்குத்தாக அமையும் இடம்
(அ) மையம் (ஆ) தொடு புள்ளி (இ) முடிவிலி (ஈ) நாண்

12. வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்?
(அ) ஒன்று (ஆ) இரண்டு (இ) முடிவற்ற எண்ணிக்கை (ஈ) பூஜ்ஜியம்


13. $O$ -வை மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி $P$ -யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் $PA$ மற்றும் $PB$ ஆகும். $\angle APB = 70^\circ$ எனில், $\angle AOB$ -யின் மதிப்பு
(அ) $100^\circ$ (ஆ) $110^\circ$ (இ) $120^\circ$ (ஈ) $130^\circ$

14. படத்தில் $O$ -வை மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் $CP$ மற்றும் $CQ$ ஆகும். $ARB$ ஆனது வட்டத்தின் மீதுள்ள புள்ளி $R$ வழியாகச் செல்லும் மற்றொரு தொடுகோடு ஆகும். $CP = 11$ செ.மீ மற்றும் $BC = 7$ செ.மீ, எனில் $BR$ –யின் நீளம்




(அ) $6$ செ.மீ (ஆ) $5$ செ.மீ
(இ) $8$ செ.மீ (ஈ) $4$ செ.மீ

15. படத்தில் உள்ளவாறு $O$ -வை மையமாகக் கொண்ட வட்டத்தின் தொடுகோடு $PR$ எனில், $\angle POQ$ ஆனது




(அ) $120^\circ$ (ஆ) $100^\circ$
(இ) $110^\circ$ (ஈ) $90^\circ$

1. $(-5,0)$ , $(0,-5)$ மற்றும் $(5,0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு
(அ) $0$ ச.அலகுகள் (ஆ) $25$ ச.அலகுகள் (இ) $5$ ச.அலகுகள் (ஈ) எதுவுமில்லை

2. ஒரு சுவரின் அருகே நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு நபருக்கும் சுவருக்கும் இடையே உள்ள தூரம் $10$ அலகுகள். சுவரை $Y$ –அச்சாகக் கருதினால், அந்த நபர் செல்லும் பாதை என்பது
(அ) $x = 10$ (ஆ) $y = 10$ (இ) $x = 0$ (ஈ) $y = 0$

3. $x = 11$ எனக் கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடானது
(அ) $X$ –அச்சுக்கு இணை (ஆ) $Y$ –அச்சுக்கு இணை
(இ) ஆதிப் புள்ளி வழிச் செல்லும் (ஈ) $(0,11)$ என்ற புள்ளி வழிச் செல்லும்

4. $(5,7)$, $(3,p)$ மற்றும் $(6,6)$ என்பன ஒரு கோடமைந்தவை எனில், $p$–யின் மதிப்பு
(அ) 3 (ஆ) 6 (இ) 9 (ஈ) 12

5. $3x - y = 4$ மற்றும் $x + y = 8$ ஆகிய நேர்க்கோடுகள் சந்திக்கும் புள்ளி
(அ) $(5,3)$ (ஆ) $(2,4)$ (இ) $(3,5)$ (ஈ) $(4,4)$





**கி. அருள்மொழி ப.ஆ. (கணிதம்)**
**அறிஞர் அண்ணா நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி**
**செங்கல்பட்டு.**

LIVEWORKSHEETS